அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

23 T I

முதலாம் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2020

**First Term Test - Grade 13 - 2020**

சுட்டெண் : ........................ அரசியல் விஞ்ஞானம் I Political Science I காலம் : 2 மணி

**அறிவுறுத்தல்கள்:**

- இவ்வினாத்தாள் **A மற்றும் B** என்ற **இரு** பகுதிகளைக் கொண்டிருப்பதுடன் பகுதி **A** ஆனது **30** பல்தேர்வு வினாக்களையும் பகுதி **B** ஆனது **20** குரு வினாக்களையும் கொண்டுள்ளது.
- சகல வினாக்களுக்குமான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுத வேண்டும்.
- ஒரு விடைக்கு இரண்டு புள்ளிகள் என்ற அடிப்படையில் மொத்தம் **100** புள்ளிகள் வழங்கப்படும்.

**பகுதி A**

- **1 தொடக்கம் 10 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமற்ற விடையைத் தெரிவு செய்க.**

1. அரசியல் விஞ்ஞானக் கற்கையினுள்,
   (1) அரசியலுடன் தொடர்புபட்ட விடயங்கள் ஆய்வு செய்யப்படுகின்றன.
   (2) கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்கள் ஆய்வு செய்யப்படுகின்றன.
   (3) ஆன்மீக வாழ்வு முகாமைத்துவம் செய்யப்படுகின்றது.
   (4) புதிய கோட்பாடுகளும் எண்ணக்கருக்களும் கட்டியெழுப்பப்படுகின்றன.
   (5) அரசியல் முறைகளும் கொள்கைகளும் ஆய்வுக்கு உட்படுத்தப்படும். (......)

2. அரசியல் தொடர்பான நடத்தைவாத அணுகுமுறை,
   (1) மெய்ப்பிக்கக்கூடிய நோக்கம் சார்ந்த தரவுகள் மற்றும் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டது.
   (2) பெறுமானங்களின் தீர்மானங்களாக இருக்க வேண்டும்.
   (3) எமது தனிப்பட்ட சுய முடிவுகள் மற்றும் நம்பிக்கைகள் ஆகியவற்றிலிருந்து விடுபட்டிருக்க வேண்டும்.
   (4) புதிய தொழினுட்ப முறையினைப் பயன்படுத்துகின்றது.
   (5) துல்லியமான உறுதிப்படுத்தப்பட்ட விடயங்களை மாத்திரம் ஆய்வுக்காக பயன்படுத்துகின்றது. (......)

3. அரசும் அரசாங்கமும்,
   (1) எந்தவொரு சமூகத்திலும் காணப்படும் அடிப்படையான மற்றும் மையமான அரசியல் நிறுவனங்களாகும்.
   (2) ஜனநாயகத்திற்கு முற்பட்ட காலம் முதல் அரசியல் முறைகளில் இருவேறு நிறுவனங்களாகவே செயற்பட்டது.
   (3) சமூகத்தில் காணப்படும் ஏனைய பெரும்பாலான அரசியல் நிறுவனங்கள் இவ்விரண்டினாலேயே தோற்றுவிக்கப்பட்டன.
   (4) அரசின் அதிகாரங்களைப் பயன்படுத்தும் பிரதான முகவர் நிறுவனமாகவே அரசாங்கம் செயற்படுகின்றது
   (5) கிரேக்க காலம் முதல் இன்று வரை இவை அரசியலில் பிரதான எண்ணக்கருக்களாகும். (......)

4. அரசியல் கட்சிகள்,
   (1) அரசாங்க அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக மாத்திரம் செயற்படுகின்றது..
   (2) சிதறியுள்ள பொதுசன அபிப்பிராயத்தை ஒன்று சேர்க்கின்றது.
   (3) அரசியல் உயர்குழாமினரை உருவாக்கின்றது.
   (4) அரசாங்கத்தின் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கின்றது.
   (5) வாக்காளர்களின் அபிலாசைகளை அரசியல் செயற்பாட்டினுள் கொண்டு செல்கின்றது. (......)
   (6)



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

5. நவீன தேசிய அரசு,
   (1) நிச்சயிக்கப்பட்ட ஆள்புலப் பிரதேசத்தைக் கொண்டது.
   (2) ஓர் இனத்துக்கு ஓர் அரசு என்ற எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டது.
   (3) தற்காலத்தில் **பன்மைவாதம்** என்ற எண்ணக்கருவை ஏற்றுக் கொள்கின்றது.
   (4) முதலில் 17 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலேயே வளர்ச்சியடைந்தது.
   (5) தற்காலத்தில் அரசு மற்றும் தேசத்தினைக் கட்டியெழுப்புவதில் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளது. (......)

6. நவ தாராண்மைவாத அரசு,
   (1) தேசிய அரசுகளின் தேசிய எல்லைகளைத் தாண்டி சந்தைப் பொருளாதார முறையொன்று தோற்றம் பெற்றது.
   (2) சந்தைகளை வழிநடாத்துவதற்கான எந்தவொரு வாய்ப்பும் தேசிய அரசுகளுக்கு இல்லை.
   (3) நலன்புரி அரச கொள்கையினை நடைமுறைப்படுத்தியது.
   (4) சந்தைப் பொருளாதாரத்திற்கு இணையாக உலகலாவிய கலாச்சாரமும் விருத்தியடைந்தது.
   (5) உலகமயமாக்கம் என்ற எண்ணக்கரு தோற்றம் பெற்றது. (......)

7. சமஷ்டி அரசியலமைப்பை உருவாக்குவதற்கான காரணங்களாவன,
   (1) வெளியக அச்சுறுத்தல் காணப்படல்
   (2) சர்வதேச தொடர்புகளை சிறப்பான முறையில் முகாமைத்துவம் செய்தல்
   (3) நிலத்தின் விசாலத்தன்மையும் இனப்பல்வகைமையும்.
   (4) பொருளாதார அபிவிருத்தி
   (5) அதிக இனப்பிரிவுகள் இல்லாமை (......)

8. அர்த்த சமஷ்டி அரசியலமைப்பு,
   (1) ஒற்றை மற்றும் சமஷ்டி ஆகிய இரண்டுக்கும் இடைப்பட்ட அரசியலமைப்பாகும்.
   (2) இரட்டை அரசாங்க நிறுவனங்கள் காணப்படும்..
   (3) இந்தியாவில் நடைமுறையில் உள்ளது.
   (4) மத்திய அரசாங்கத்திற்கு பெருமளவிலான அதிகாரங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.
   (5) விரும்பிய சந்தர்ப்பத்தில் பிராந்திய அரசுக்கு பிரிந்து செல்ல முடியும். (......)

9. பாராளுமன்ற அரசியலமைப்பு,
   (1) சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்குமிடையில் தெளிவான வேறுபாட்டைக் காண முடியாது.
   (2) பிரித்தானியா இந்த மாதிரியைப் பினபற்றுகின்றது.
   (3) கூட்டுப் பொறுப்பு என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது.
   (4) அரச தலைவர் நேரடியாக தெரிவு செய்யப்படுவார்.
   (5) இங்கு நிறைவேற்றுத்துறையை நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றின் மூலம் பதவி நீக்க முடியும். (......)

10. தாராண்மைவாதக் கருத்தியல்,
   (1) சர்வதிகார அரசாட்சி முறைக்கு எதிராக தோற்றம் பெற்றது.
   (2) தடைகள், கட்டப்பாடுகள், தலையீடுகள் இல்லாமல் கிடைக்கும் சுதந்திரத்தை ஆதரிக்கின்றது..
   (3) அரசின் பொறுப்பு பொதுச் சொத்து முறையினை உறுதிப்படுத்துவதாகும்
   (4) மூன்று கட்டங்களாக பரவலடைந்தது.
   (5) சுதந்திர சந்தையும் சுதந்திர பொருளாதாரமும் இணைந்து காணப்படுகின்றது. (......)

- **11 தொடக்கம் 20 வரையிலான வினாக்களிற்கு தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியான கூற்றுக்களின் தொகுதியினைக் கொண்ட விடையினைத் தெரிவு செய்க.**

11. சமூக ஜனநாயகத்தின் படி முதலாளித்துவ சமவுடைமைவாத அடிப்படைகளுக்கு ஏற்ப மறுசீரமைப்புச் செய்யும் போதான கொள்கை ரீதியான அடிப்படைகளான.
   A. பொருளாதாரத்துறையில் அரசு தலையிடாமை
   B. கலப்புப் பொருளாதாரம்
   C. சமூக நலன்புரி
   D. வறுமானம் மற்றும் செல்வங்களை சமூகத்திற்கு மீளப் பகிர்ந்தளித்தல்
   E. கூட்டுப் பேரம் பேசுதல்.

   (1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE (......)


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

12. தாராண்மைவாத மதச்சார்பின்மையின் அடிப்படைகளாவன,

A. அரசு மற்றும் திருச்சபை ஆகியவற்றை நிறுவன ரீதியாக வேறாக்கல்.
B. அரசு சமயத்துடன் அன்யோன்யமாக இருக்கக் கூடாது.
C. அரசு எந்தவொரு சமயத்துக்கும் பக்கச்சார்பாக இருக்கக் கூடாது.
D. மதச் சுதந்திரம் பிரஜைகளின் உரிமைகளுள் ஒன்று
E. அரசின் அனுமதியுடன் மாத்திரமே சமயத்தினால் நிலைத்திருக்க முடியும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE (......)

13. முரண்பாட்டின் பாதகங்களாவன,

A. முதலாம், இரண்டாம் உலக மகா யுத்தங்கள்.
B. பயங்கரவாதமும் பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தமும்
C. ஒன்றுக்கொன்று நேரெதிரான சமூக வர்க்கங்களுக்கிடையே வரலாறு முழுவதும் ஏற்பட்ட முரண்பாடுகள்
D. இன முரண்பாடுகள்
E. நாடுகளுக்கிடையிலான யுத்தங்கள்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE (......)

14. ஜனநாயகத்துக்குத் தேவையான நிபந்தனைகளாவன,

A. யாப்புறுவாதம்
B. பொதுச் சொத்து முறைமை.
C. அரசியல் மற்றும் பொருளாதாரப் போட்டி.
D. தடைகளும் சமன்பாடுகளும்.
E. தேர்தல்கள் மற்றும் சந்தை தொடர்பான சுதந்திரம்

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE (......)

15. அமெரிக்க அரசியலமைப்பு,

A. மக்கள் இறைமை என்ற சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டது.
B. இரட்டைக் குடியுரிமையை வழங்குகின்றது.
C. தடைகள் மற்றும் சமன்பாடுகள் என்ற கொள்கையை கடைபிடிக்கின்றது.
D. பண்பாடுகள், வழமைகள் மற்றும் மரபுகளைக் கடைப்பிடிக்கின்றது.
E. உறுதித் தன்மையற்றது

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE (......)

16. இந்திய அரசியலமைப்பு,

A. உலகில் நீண்டதொரு அரசியலமைப்புக்கு உரித்துடையது.
B. 27 மாநிலங்களையும் 7 யூனியன் பிரதேசங்களையும் கொண்டது
C. பலமான மத்திய அரசைக் கொண்டது.
D. சமமற்ற அதிகாரப்பகிர்வினைக் கொண்டது.
E. தூய சமஷ்டிமுறையைக் கொண்டது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE (......)

17. கொள்கைச் செயன்முறையின் படிமுறைகளாவன,

A. நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தல்
B. கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல்
C. கொள்கை மதிப்பீடு
D. கொள்கை ஆலோசனை
E. கொள்கைகளை நிறைவு செய்தல்

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE (......)



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

NWP - EXAM

18. 1833 கோல்புருக் சீர்திருத்தத்தின் விளைவுகளாவன,
A. ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி முறையொன்று உருவாதல்
B. ஆட்சியதிகாரம் பரவலாக்கப்படல்.
C. ஏற்றுமதி, இறக்குமதி பொருளாதார முறையொன்றுக்கு அடித்தளமிடப்பட்டது.
D. சுயாதீன சிவில் சமூகமொன்று உருவாவதில் ஆரம்ப அடித்தளமாக அமைந்தது.
E. அரசின் வர்த்தக ஏகபோக உரிமை இல்லாதொழிக்கப்பட்டது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE (......)

19. டொனமூர் சிர்திருத்தத்தின் கீழ்,
A. சமூக நலன்புரி வேகமடைந்தது.
B. இனவாரிப் பிரதிநிதித்துவம் இரத்துச் செய்யப்பட்டது.
C. 18 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் வாக்குரிமை கிடைத்தது.
D. பொறுப்புமிக்க அரசியலமைப்பொன்று வழங்கப்பட்டது
E. மேலெழுந்து சென்ற சமவுடைமைவாத இயக்கங்களை வலுவிழக்கச் செய்தது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE (......)

20. அரசாங்க சபைக்குக் (அரசுக் கழகம்) காணப்பட்ட மட்டுப்பாடுகள் தொடர்பில் சரியான கூற்று,
A. இலங்கை தொடர்பில் சட்டம் இயற்றுவதற்கு பிரித்தானிய பாராளுமன்றுக்கு அதிகாரம் இருந்தமை
B. டொனமூர் அரசியலமைப்பைத் திருத்தும் அதிகாரம் அரசாங்க சபைக்கு காணப்பட்டது.
C. வெளிவிவகாரம் தொடர்பில் சட்டம் இயற்றுவதற்கு அரசாங்க சபைக்கு முடியாமை.
D. அரசாங்க சபையைக் கலைக்கும் அதிகாரம் தேசாதிபதிக்குக் காணப்பட்டது.
E. அரசாங்க சபையின் அனைத்துத் தீர்மானங்களும் தேசாதிபதிக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE (......)

- **21 தொடக்கம் 25 வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க**

21. சோல்பரி அரசியலமைப்பின் கீழ்,
(1) அரசியலமைப்பு எழுதப்படாத அரசியலமைப்பாக இருந்தது.
(2) நீதிச் சேவையின் சுதந்திரத்திற்காக இரு நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன..
(3) பாராளுமன்ற இறைமை நடைமுறைப்படுத்தப்பட்டது.
(4) பிரித்தானிய பாராளுமன்ற முறைக்கு இணையான பாராளுமன்ற முறையொன்று உருவாக்கப்பட்டது.
(5) ஓரங்க சட்டமன்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டது. (......)

22. சோல்பரி அரசியலமைப்பின் கீழ் நிறைவேற்றுத்துறை,
(1) மகாதேசாதிபதி அரசின் தலைவராவார்.
(2) உண்மை நிர்வாக அதிகாரம் மகா தேசாதிபதியிடம் இருந்தது.
(3) அரச சேவையின் சுயாதீனத்திற்கு இரு நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன.
(4) உண்மை நிர்வாகத்தின் பதவிக்காலம் ஆறு வருடங்களாகும்.
(5) மகா தேசாதிபதி இந்நாட்டுப் பிரஜையிலிருந்து தெரிவு செய்யப்பட்டார். (......)

23. 1972 அரசியலமைப்பு,
(1) நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியுடன் கூடிய அரசியலமைப்பை வழங்கியது.
(2) சுயாதீன அரச சேவையை உருவாக்கியது.
(3) செனட் சபையை அவ்வாறே கொண்டு நடாத்தியது
(4) உயர் நீதிமன்றுக்கு அரசியலமைப்பு விவரண அதிகாரத்தை வழங்கியது.
(5) இலங்ககையை குடியரசாக மாற்றியது. (......)

24. 1972 அரசியலமைப்பின் கீழ் சட்டத்துறையானது,
(1) பதவிக் காலம் ஐந்து வருடங்களாகும்.
(2) இந்நாட்டின் அரசியல் முறையினுள் உயர் நிறுவனமாகும்.
(3) இரு சபைகளைக் கொண்டிருந்தது.
(4) பாராளுமன்ற இறைமையினைப் பெற்றிருக்கவில்லை.
(5) பாராளுமன்றம் என்ற பெயரில் அறியப்பட்டது (......)


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

25. இந்நாடு காலனித்து நிலைமாற்றத்தினுள்,
(1) கட்டாய இராசகாரிய முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.
(2) தன்னிறைவுப் பொருளாதாரம் அவ்வாறே செயற்படுத்தப்பட்டது.
(3) மறைமுக வரிக்குப் பதிலாக நேரடியான வரிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.
(4) சட்டவாக்கத்துறையும் நிர்வாகத் துறையும் உருவாக்கப்பட்டது.
(5) அரசின் வர்த்தக ஏகபோக உரிமை அவ்வாறே நடைமுறைப்படுத்தப்பட்டது. (......)

- **26 தொடக்கம் 30 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள (1),(2),(3), (4) மற்றும் (5) ஆகிய விடைகளில் இருந்து தரப்பட்டுள்ள இரு கூற்றுக்களுக்கும் மிகச் சரியாகப் பொருந்தும் விடை இலக்கத்தினைத் தெரிவு செய்து அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

| **இலக்கம்** | **முதலாவது கூற்று** | **இரண்டாவது கூற்று** |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதல் கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | **முதலாவது கூற்று** | **இரண்டாவது கூற்று** |
|---|---|---|
| 26. | 1833 கோல்புரூக் சீர்திருத்தத்தின் கீழ் இரட்டை ஆட்சி இரத்துச் செய்யப்பட்டது.. | இவ்வரசியல் அமைப்பின் கீழ் முழு இலங்கையும் பொதுவான சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. (......) |
| 27. | 1910 குருமக்கலம் சீர்திருத்தில் இலங்கைக்கு வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது. | இது இலங்கையின் மொத்த சனத் தொகையில் நான்கு வீதத்தினருக்காகும். (......) |
| 28. | டொனமூர் யாப்பின் கீழ் அரசாங்க முறையினுள் முக்கிய நபராக கருதப்பட்டவர் தேசாதிபதியாவார். | இவ்வரசியலமைப்பில் உள்நாட்டுப் பிரதிநிதிகளுக்கு அதிக பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. (......) |
| 29. | சோல்பரி சட்டத்துறை மூன்று பிரதான நிறுனங்களினால் உருவாக்கப்பட்டது. | பிரதிநிதிகள் சட்டத்துறைக்கு தெரிவு செய்யப்படுவதற்காக விகிதாசார பிரதிநித்துவ முறையே பயன்படுத்தப்பட்டது. (......) |
| 30. | 1972 அரசியலமைப்பின் கீழ் அடிப்படை உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு உரிமையை பாதுகாக்கும் பொறுப்பு நீதித்துறைக்கு வழங்கப்பட்டது. | இந்த அரசியலமைப்பின் கீழ் **அரசியலமைப்பு நீதிமன்றம்** என்ற பெயரில் தனியான நீதிமன்றமொன்று உருவாக்கப்பட்டது. (......) |

## பகுதி B

31. **அரசியல் என்பது பிஜைகளின் சமூகப் பயன்பாடாகும்.** இதற்கு முன்வைக்க முடியுமான காரணிகள் இரண்டு தருக.

(i) ..................................................................................................................

(ii) ..................................................................................................................

32. பாராளுமன்ற நிறுவனத்தின் இருப்புக்காக அதற்கென ஒழுங்கமைக்கப்பட்ட நடைமுறைகள் பல உள்ளன. அவற்றுள் இரண்டை எழுதுக.

(i) ..................................................................................................................

(ii) ..................................................................................................................


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

33. அரசியல் விஞ்ஞானத்தின் விடயப் பரப்புடன் தொடர்புபட்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள எண்ணக்கருக்களை அறிந்து எழுதுக.

(i) சமூகத்தின் அரசியலுக்கு அழுத்தம் கொடுக்கும், அரசியல் செயற்பாட்டிற்கும் அதன் போக்கிற்கும் வழிகாட்டும் சமூகத்தின் பெரும்பான்மையோரை ஈர்த்துக் கொள்ளும் அரசியல் கருத்துக்கள் மற்றும் நம்பிக்கையினைக் கொண்ட உறுதியான கருத்தக்களின் தொகுதியாகும்.

(ii) சமூகத்தில் நடைபெறும் தோற்றப்பாடுகள் எவ்வாறு ஏற்படுகின்றது என்பதை தெளிவுபடுத்தவும் விபரிக்கவும் பயன்படுத்தப்படும் விதிமுறைகளாகும்.

(i) ……………………………………………………………………………………………

(ii) ……………………………………………………………………………………………

34. பின்வரும் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படும் அரசியல் நிறுவனங்களைப் பெயரிடுக..

(i) தேர்தல் அல்லது வேறு ஊடகத்தின் ஊடாக அரசாங்க அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கினைக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனமாகும்.

……………………………………………………………………………………………

(ii) அரசுக்கு வெளியில் சுயாதீனமான பிரஜைகள் தமது நோக்கங்களுக்காக ஒன்றிணைந்து ஒற்றுமையாகச் செயற்படும் சமூக வாய்ப்பாகும்.

……………………………………………………………………………………………

35. கீழ்க் குறிபபிடப்பட்டுள்ள கூற்றுக்களினால் குறிப்பிடப்படும் அரச மாதிரிகள் யாவை என்பதை குறிப்பிடுக.

(i) அரசு சமூக நிறுவனமல்லாமல் அது சமூகத்துக்கு மேலுள்ளதாகும்.

……………………………………………………………………………………………

(ii) தொழிலாளர் வர்க்கக் கட்டளையின் கீழ் பொருளாதார வளம் மற்றும் உற்பத்திச் செயற்பாட்டின் தனியார் உரிமையை இல்லாதொழித்து சமூகப் பொது அதிகாரத்தினை உருவாக்குதல்

……………………………………………………………………………………………

36. இறைமை என்ற எண்ணக்கரு தற்காலத்தில் பாரிய சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு இரு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவ்விரண்டையும் பெயரிடுக.

(i) ……………………………………………………………………………………………

(ii) ……………………………………………………………………………………………

37. சமூக ஒப்பந்தக் கோட்பாட்டை முன்வைத்த அரசியல் சிந்தனையாளர்கள் இருவரப் பெயரிடுக..

(i) ……………………………………………………………………………………………

(ii) ……………………………………………………………………………………………

38. நிறைவேற்று அதிகாரம் ஒழுங்கமைந்திருக்கும் முறைப்படி காணப்படும் அரசியலமைப்பு மாதிரிகள் இரண்டைப் பெயரிடுக.

(i) ……………………………………………………………………………………………

(ii) ……………………………………………………………………………………………

39. குடியாட்சிவாதத்தில் பொதுவான மூலக் கொள்கைகள் சில காணப்படுகின்றன. அவற்றுள் இரண்டை எழுதுக..

(i) ……………………………………………………………………………………………

(ii) ……………………………………………………………………………………………



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

NWP-EXAM

40. முரண்பாடு தொடர்பான அரசியல் வகைப்படுத்தல் மூன்றாகும். அவற்றுள் இரு வகையினை எழுதுக.

(i) ....................................................................................................................................

(ii) ....................................................................................................................................

41. சுவிட்சர்லாந்து சமஷ்டி மூன்று தாபனங்களை உள்ளடக்கியுள்ளது அவற்றுள் இரண்டை எழுதுக..

(i) ....................................................................................................................................

(ii) ....................................................................................................................................

42. வரையறுக்கப்பட்ட அரசாங்கம் தொடர்பான எண்ணக்கரு வளர்ச்சியடைவதில் பிற்காலத்தில் அதனுடன் சில விடயங்கள் ஒன்று சேர்ந்தன. அவற்றுள் இரண்டைத் தருக.

(i) ....................................................................................................................................

(ii) ....................................................................................................................................

43. காலனித்துவவாத அரசு காலனித்துவங்களில் காலனித்துவ அரசுகளைக் கட்டியெழுப்ப சிற்சில சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியது. அதற்கான காரணங்கள் இரண்டினை எழுதுக.

((i) ....................................................................................................................................

(ii) ....................................................................................................................................

44. கோல்புரூக் சீர்திருத்தத்தின் படி 1833 உருவாக்கப்பட்ட சட்டக்கழகம் இரு வகையான உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. அவ்வுறுப்பினர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகத் தருக.

(i) ....................................................................................................................................

(ii) ....................................................................................................................................

45. டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தை இந்நாட்டில் அறிமுகப்படுத்துவதற்கெதிராக அழுத்தம் கொடுத்த காரணிகள் இரண்டை எழுதுக.

(i) ....................................................................................................................................

(ii) ....................................................................................................................................

46. டொனமூர் யாப்பின் கீழ் இந்நாட்டில் இரட்டை நிர்வாகமொன்று உருவானது. அவ்விரு நிர்வாகத் தரப்பினரையும் அறிமுகப்படுத்துக.

(i) ....................................................................................................................................

(ii) ....................................................................................................................................

47. 1947 அரசியல் யாப்பு முறையின் கீழ் உருவாக்கப்பட்ட செனட் சபையின் நோக்கங்கள் இரண்டு தருக.

(i) ....................................................................................................................................

(ii) ....................................................................................................................................

NWP - EXAM



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, விநியோகிக்கப்பட்டுள்ளது.

48. சோல்பரி அரசியல் யாப்புக்கெதிராகக் காணப்படும் விமர்சனங்கள் இரண்டை எழுதுக.

(i) ..............................................................................................................................................

(ii) ..............................................................................................................................................

49. (i) இலங்கைக்கு அடிப்படை உரிமையினை அறிமுகப்படுத்திய முதல் அரசியல் யாப்பு எது?

(ii) அரச கொள்கை தொடர்பான மூலதத்துவத்தை முதன்முதலாக இலங்கைக்கு அறிமுகப்படுத்திய அரசியல் யாப்பு எது?

(i) ..............................................................................................................................................

(ii) ..............................................................................................................................................

50. இந்நாட்டிற்கு இனவாரி பிரதிநிதித்துவத்தை கொண்டுவந்த மற்றும் இரத்துச் செய்த அரசியல் யாப்புக்களை முறையே எழுதுக.

(i) ..............................................................................................................................................

(ii) ..............................................................................................................................................

NWP - EXAM



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

23 T II

முதலாம் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2020

**First Term Test - Grade 13 - 2020**

சுட்டெண் : ........................

அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

காலம் : 3 மணி

**அறிவுறுத்தல்கள்:**

- இவ்வானாப்பத்திரம் **மூன்று** பகுதிகளைக் கொண்டதாகும்.
- பகுதி I இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் பகுதி II இலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையும் பகுதி III இலிருந்து குறைந்த பட்சம் **ஒரு** வினாவையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து (05)** வினாக்களுக்கு விடை தருக.
- ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் வழங்கப்படும்.

## பகுதி I

1. அரசியல் என்றால் என்ன? விபரிக்குக. (20 புள்ளிகள்)

2. அரசு மற்றும் அதன் வகிபங்கினைக் கலந்துரையாடுக. (20 புள்ளிகள்)

3. ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டியாட்சி அரசியலமைப்புக்களை ஒப்பிடுக. (20 புள்ளிகள்)

## பகுதி II

4. காலனித்துவ மரிமாற்றத்தினுள் நிகழ்ந்த அரசியல் பரிமாற்றம் தொடர்பாக ஆராய்க. (20 புள்ளிகள்)
5. பின்வரும் தலைப்புக்களில் ஏதேனும் **இரண்டினை** மாத்திரம் தெளிவுபடுத்துக..
   (i) சர்வசன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டமை.
   (ii) சோல்பரி யாப்பின் கீழ் சிறுபான்மைக் காப்பீட்டுக்காக வழங்கப்பட்ட ஏற்பாடுகள்
   (iii) சோல்பரி யாப்பின் கீழ் செனட் சபை
   (iv) மகாதேசாதிபதிப் பதவி (10X2=20 புள்ளிகள்)

6. சோல்பரி அரசியல் யாப்பு மற்றும் 1972 யாப்பு ஆகியவற்றின் கீழ் சட்டத்துறையின் அதிகாரங்களைக் கலந்துரையாடுக..
   (20 புள்ளிகள்)
7. 1972 முதலாம் குடியரசு அரசியல் யாப்பின் கீழ் பின்வரும் தலைப்புக்களில் ஏதேனும் இரண்டினை ஆராய்க.
   (i) அரச சேவை
   (ii) நாம நிர்வாகம்
   (iii) அரசியலமைப்பு நீதிமன்றம். (10X2=20 புள்ளிகள்)



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

## பகுதி III

8. பின்வரும் தலைப்புக்களில் ஏதெனும் இரண்டினைக் கலந்துரையாடுக.
   (i) முரண்பாட்டு வாழ்க்கைச் சக்கரம்
   (ii) கொள்கைச் செயன்முறை
   (iii) இலங்கை அரசியல் யாப்பில் ஜனநாயக மற்றும் ஜனநாயகமல்லாத அம்சங்கள்
   (iv) கலப்பு அரசியலமைப்பு (10X2=20 புள்ளிகள்)

9. இந்திய அரசியலமைப்பில் அரைகுறை சமஷ்டியின் பண்புகளைத் தெளிவுபடுத்துக. (20 புள்ளிகள்)

10. பின்வரும் தலைப்புக்களில் ஏதேனும் **இரண்டினை ஆராய்க.**
   (i) மதச்சார்பின்மைவாதம்
   (ii) ஒப்பீட்டு அணுகுமுறை
   (iii) உலகமயமாக்கமும் அரசும்
   (iv) அமுக்கக் குழுக்கள் (10X2=20 புள்ளிகள்)

NWP - EXAM



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

முதலாம் தவணைப் பரீட்சை– 2020

# அரசியல் விஞ்ஞானம் - Political Science – தரம் 13 – விடைகள்

## விடைப்பத்திரம்

### பகுதி - A

| | | |
|---|---|---|
| 01 - 3 | 11 - 2 | 21 - 4 |
| 02 - 2 | 12 - 1 | 22 - 1 |
| 03 - 2 | 13 - 3 | 23 - 5 |
| 04 - 1 | 14 - 4 | 24 - 2 |
| 05 - 4 | 15 - 1 | 25 - 4 |
| 06 - 3 | 16 - 1 | 26 - 1 |
| 07 - 5 | 17 - 5 | 27 - 5 |
| 08 - 5 | 18 - 4 | 28 - 2 |
| 09 - 4 | 19 - 3 | 29 - 2 |
| 10 - 3 | 20 - 4 | 30 - 3 |

### பகுதி - B

31. i. பிரஜைகளினால் ஆட்சியாளர்கள் நியமிக்கப்படல்.
    ii. அரசியல் கட்சிகளின் செயற்பாட்டு உறுப்பினராதல்.
32. i. ஜனநாயகம்
    ii. தேர்தல் செயற்பாடு
    iii. மக்கள் இறைமை
33. i. அரசியல் கருத்தியல்.
    ii. அரசியல் கோட்பாடு
34. i. அரசியல் கட்சிகள்
    ii. சிவில் சமூகம்
35. i. பாசிசவாத அரசு
    ii சமவுடைடைவாத அரச மாதிரி.
36. i. சமஷ்டிவாதம்


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

ii. உலகமயமாக்கல் செயன்முறை

37. i. தோமஸ் ஹொப்ஸ்

ii. ஜோன் லொக்

ii. ரூசோ

38. i. பாராளுமன்ற அரசியலமைப்பு

ii. ஜனாதிபதி அரசியலமைப்பு

iii. கலப்பு அரசியலமைப்பு

iv. அனைத்தாண்மை அரசியலமைப்பு

39. i. அரசாட்சி முறைமைக்கு நேரெதிரானதாகும்

ii. இறைமையின் உரிமையாளன் அரசன் / ஆட்சியாளன் அன்றி பொதுமக்களாவர்

iii. அரசின் தலைவன் மக்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட வேண்டும்

40. i. அரசுகளுக்கிடையிலான முரண்பாடுகள்

ii. உள்ளக முரண்பாடுகள்

iii. அரசு நிர்மான முரண்பாடுகள்

41. i. மத்திய அரசாங்கம்

ii. கன்ரன்கள்

iii. கொம்யூன் (உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள்)

42. i. நிபந்தனைகளுக்குட்பட்ட பொறுப்பு

ii. வரையறுக்கப்பட்ட பதவிக்காலம்

iii. சட்டத்தின் ஆட்சி

iv. தடைகளும் சமன்பாடுகளும்

v. அதிகார வேறாக்கம்

vi. அதிகார ஒப்படைப்பு

43. i. தமது காலனித்துவத்தை கொண்டு செல்வதற்கான பாதுகாப்பும் நிருவாகச் செலவும் அதிகரித்தமை மற்றும் நேரடியாக காலனித்துவத்தை நிருவகிக்க முடியாமல் போனமை.

ii. தமக்கு எதிரேயுள்ள புதிய சமூகத்தில் காணப்படும் வாழ்க்கை முறை, அபிலாசைகள் காலனித்துவவாதிகளின் கலாசாரத்தோடு ஒத்துப்போகாமையினால் அவற்றை மாற்றிக் கொள்ளல்.

iii. தமக்கு கீழ்ப்பட்ட சமூகத்தினை தமது தாய்நாட்டின் உச்சமட்ட வளர்ச்சிக்காக பயன்படுத்திக்கொள்ளல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகும்.

44. i. உத்தியோக பூர்வ - 09

ii. உத்தியோகப்பற்றற்ற - 06

45. i. இலங்கை சமூகத்தில் பலதரப்பட்ட அமைப்புக்களின் கோரிக்கை


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

ii. பிரித்தானிய அரசாங்கம் மாற்றமடைதல்

iii. தேசாதியதியின் கோரிக்கை

46. i. தேசாதிபதியும் அரச உத்தியோத்தர் மூவரும்

ii இலங்கை அமைச்சர்கள்

47. i. சனப் பிரதிநிதிகள் சபையின் அவசர சட்டவாக்கத்தை தடுத்தல்

ii. சிறுபான்மையினரின் உரிமையினைப் பாதுகாத்தல்

iii. படித்த அனுபவமுள்ளவர்களின் சேவையினை நாட்டுக்குப் பெற்றுக் கொள்ளல்.

48. i. இவ்யாப்பின் கீழ் சில விடயங்கள் பாராளுமன்ற இறைமைக்கு தடையாக இருத்தல்

ii. இதன் கீழ் இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து கிடைத்தமை

iii. இறுதி மேன்முறையீட்டு அதிகாரம் பிரித்தானிய இராணிக்கு இருந்தமை

iv. இந்நாட்டின் அரச தலைவர் மகா ராணியாக இருந்தமை.

49. i. 1972 முதலாம் குடியரசு யாப்பு

ii. 1972 முதலாம் குடியரசு யாப்பு

50. i. 1833 கோல்புரூக் சீர்திருத்தம்

ii. 1931 டொனமூர் சீர்திருத்தம்



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

WWW.LOL.LK

# BUY

## PAST PAPERS

071 777 4440

Buy Online - www.LOL.lk

- GCE O/L
- GCE A/L
- PAST PAPERS
- SHORT NOTES



Protect Yourself From Coronavirus

# YOU STAY AT HOME




# WE DELIVER!

**ORDER NOW**

**075 699 9990**

**WWW.LOL.LK**

LOL.lk
Learn Ordinary Level

**TOP CATEGORIES**

- GCE O/L Exam NEW
- Grade 09, 10 & 11
- Grade 06, 07 & 08
- Grade 04 & 05
- Grade 01, 02 & 03
- About Us
- Shop HOT
- Cart

HUGE SALE – SHOP NOW




**ISLANDWIDE DELIVERY**
Free delivery on all orders over Rs. 3500

**More than 1000+ Papers**
For all major Subjects and mediums

**ONLINE SUPPORT 24/7**
Shopping Hotline 071 777 4440

## FEATURED PRODUCTS

**SORT BY**

- GCE O/L Exam




GCE O/L EXAM, SCIENCE
O/L Science Past Paper Book
රු 350.00
– 1 + ADD TO CART





GCE O/L EXAM, MUSIC
O/L Music Past Paper Book
රු 350.00
– 1 + ADD TO CART




GCE O/L EXAM, MATHEMATICS
O/L Mathematics Past Paper Book
රු 350.00
– 1 + ADD TO CART




GCE O/L EXAM, INFORMATION & COMMUNICATION TECHNOL...
O/L Information & Communication Tec...
රු 350.00




GCE O/L EXAM, HISTORY
O/L History Past Paper Book
රු 350.00




GCE O/L EXAM, HEALTH & PHYSICAL EDUCATION
O/L Health & Physical Education Past P...
රු 350.00